மெட்ரோ ரெயில் ஓவியம் தீட்டிய

# மாநகராட்சி பள்ளி தலைமை ஆசிரியைக்கு பாராட்டு

சென்னை,அக்.20–

சென்னை எண்ணூர், அன்னை சிவகாமி நகரில் உள்ள சென்னை பெருநகர மாநகராட்சி தொடக்கப்பள்ளி சுவரில் மெட்ரோ ரெயில் போன்று ஓவியம் வரைந்துள்ளனர். பள்ளி அலுவலக அறை மெட்ரோ ரெயில் நிலையம் போன்றும், வகுப்பறைகள் மெட்ரோ ரெயில் பெட்டிகள் போன்றும், வகுப்பறை வாசல்கள் மெட்ரோ ரெயில் பெட்டியின் நுழைவு வாயில்கள் போன்றும் வர்ணம் தீட்டப்பட்டுள்ளது.

சமீபத்தில் இது சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் கவ னத்திற்கு வந்தது. சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் பிரதீப் யாதவ், பள்ளியின் தலைமை ஆசிரியை வெற்றிச்செல்வி, ஒப்பந்த தாரர் சரவணகுமார் மற்றும் ஓவியப் பணி மேற்கொண்ட சுரேஷ்பாபு ஆகியோரை கவுரவித்து வெகுமதி மற்றும் சான்றிதழ்களை வழங்கி பாராட்டு தெரிவித்தார்.